

# மெட்ரோ ரெயிலில் இசை நிகழ்ச்சி

## பயணிகள் ஆர்வமுடன் கண்டுகளித்தனர்

சென்னை, ஜன.25–

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம், தமிழ் கலாசாரம் மற்றும் பாரம்பரியத்தை போற்றும் வகையில் சென்னை முழுவதும் பல இசைக் கலைஞர்கள், அமைப்புகளுடன் இணைந்து தமிழ் கலாசாரத்தின் இசை மற்றும் கலை நிகழ்ச்சிகளை வழங்கி வருகிறது.

இந்த நிலையில் நேற்று காலை விமான நிலைய மெட்ரோ ரெயில் நிலையத்தில் 'சென்னை கலை திருவிழா' பல்சுவை நிகழ்ச்சி நடைபெற்றது. இதைத்தொடர்ந்து விமான நிலைய மெட்ரோ ரெயில் நிலையத்தில் ஒயிலாட்டம், ஒத்தசெவுரு நிகழ்ச்சி நடந்தது.

இதேபோல் விமான நிலையம் முதல் வண்ணாரப்பேட்டை வரை இயக்கப்பட்ட மெட்ரோ ரெயிலில் பரத் நாராயண் குழுவினரின் கர்நாடக இசை நிகழ்ச்சி நடந்தது.

மேலும், வண்ணாரப்பேட்டை மெட்ரோ ரெயில் நிலையத்தில் தேவராட்டம் மற்றும் தப்பாட்டம் நடைபெற்றது. பொதுமக்கள் மற்றும் பயணிகள் இந்த நிகழ்ச்சிகளை ஆர்வமுடன் கண்டுகளித்தனர்.